1982 பிப்ரவரி 17]

அரியலூரில் புவியியல் ஆய்வு அமைப்பின் பிரிவு ஒன்றை ஏற்படுத்தும் திட்டம்

* வினா எண் 238 திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கனிமவள படிவங்கள், தகவல் குறிப்புகள் பாசில்கள் (fasils) அடங்கிய ஜியாலஜிகல் இன்பர்மேஷன் சென்டர் ஒன்றை அரியலூரில் துவக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; புதைப்படிவங்களை நிரந்தரமாக பாதுகாக்கும் பொருட்டு இந்திய புவியியல் ஆய்வு அமைப்பும், மாநில புவியியல் பிரிவும், கூட்டாக இணைந்து திருச்சி மாவட்டத்திலுள்ள அரியலூருக்கு அருகில் அருங்காட்சியகம் ஒன்றை அமைப்பதென உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூருக்கு அருகில் ஜியாலஜிக்கல் இன்பர்மேஷன் சென்டர் அமைக்கும் இடம் எது என்பதை அறிய விரும்புவதுடன், அந்தப்பகுதியில் கல்லமேடு, வெட்டிப்பாளையம் காட்டுப்பிரிளும் கால்வாய் போன்ற இடங்களில், அரும்பொருள்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அந்த சென்டரை அரியலூரிலேயே அமைக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னேன், அரியலூருக்கு அருகில் அமைக்க அரசு பரிசீலித்துக் கொண்டு வருகிறது என்று. அந்தப் பகுதியிலே அந்த மியூசியம் அமைக்கப்படும் போது, அதைச் சார்ந்திருக்கிற எல்லா பகுதிகளிலிருந்தும் எடுக்கப்படுகிற பொருள்கள் அந்த மியூசியத்திலே வைக்கப்படும்.

நெல்லை மாவட்டத்திலுள்ள கல்குவாரிகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு குத்தகைக்கு விடும் திட்டம்

* வினா எண் 239 திரு. மு. அப்பாத்துரை மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள அரசுக்குச் சொந்தமான கல்குவாரிகளை தனி நபர்களுக்கு குறைந்த தொகைக்கு குத்தகைக்கு விடும் முறையை மாற்றி ஊராட்சி ஒன்றியங்களுக்கு உரிமை வழங்கப்பட்டது உண்மையா?

(ஆ) இந்த முறை நீடிக்கப்படுமா?